நாள்: 12.06.2026
OS. 10/2025
பெயர் சரவணக்குமார்
வா.சா.1

<u>குறுக்கு விசாரணை</u> (1ம் பிரதிவாதி தரப்பு)

என்னுடைய தகவலின் அடிப்படையில் தான் வழக்கு தாக்்கல செய்யப்பட்டது. என் வீட்டை குமரன் என்பவர் நிலபுரோக்கர் என்பவர் மூலமாக தான் ஒத்திக்கு ஆள்பார்க்க சொன்னேன். அவர் த்ான் 1ம் பிரதிவாதி ராஜேஸ்வரனை அழைத்து வந்தார். 02.12.2021ல் வீடு பிடித்துக்கொண்டதால் ரூ.3,50,000/- ஒத்தி பணத்தை 1ம் பிரதிவாதி என்னிடம் தந்தார். பாக்கி தொகையான ரூ.1,00,000/- 10.12.2021ல் கொடுக்கவேண்டும் என ஒத்தி பத்திரம் எழுதிக்கொண்டோம். அதில் 95 ஆயிரம் 1ம் பிரதிவாதி மூலமாக வந்தது. 5 ஆயிரம் 2ம் பிரதிவாதி தந்தார். அதை நான் பின் பக்கம் எழுதினேன். ரூ.4,45,000/-த்தை 1ம் பிரதிவாதி என்னிடம் கொடுததார். ரூ. 5000/- அவர் மனைவி கொடுத்தார். 1ம் பிரதிவாதி, அவர் மனைவிக்கும் பிரச்சனை வந்ததால் அது சம்பந்தமாக DVC வழக்கு நிலுவையில் உள்ளது என்றும், இந்நிலையில் 1ம் பிரதிவாதி ஒத்தி தொகையை திருப்பி கேட்டதால் நான் இருவரையும் சேர்ந்து வரசொன்னேன். அவர்கள் வரவில்லை. ரூ.4,50,000/- 1ம் பிரதிவாதி கிடைக்க வேண்டும் என்றால் சரியல்ல. இந்த வழக்கு ஒத்தி தொகை 1ம் பிரதிவாதிக்கு கிடைக்கவேண்டும் என்றால் இரண்டு பேரும் சேர்ந்து எழுதிக்கொடுத்தால் அவர்கள் இருவருக்கும் கிடைக்கவேண்டியது. 1ம் பிரதிவாதி மட்டும் தொகை கொடுத்ததால் 2ம் பிரதிவாதிக்கு கிடைக்கவேண்டியதில்லை என்றால் சரியல்ல.

M SHIVAJI CHELLIAH
Digitally signed by M SHIVAJI CHELLIAH
Date: 2026.06.12 17:19:50 +0530

சார்பு நீதிபதி
உத்தமபாளையம்